**STARTING TIME 11.30 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 27/2026**

Deposition of **D.W.1** witnesses for defendant Solemnly affirmed by Tr. S. Gopi, Grade-II Bench Clerk of this court, on 17.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **தாட்சாயணி** Husband's Name : **கன்னியப்பன்**

Village : **கதவு எண். 100, பெரியதெரு, வேடல் கிராமம், அரக்கோணம் வட்டம்.**

**Age** : 41

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் வாதி எனக்கு என்ன உறவு என்றால், கணவர் ஆவார். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்தானது ஆரம்பத்தில் எனது கணவரின் தகப்பனாருக்கு சொந்தமானது என்றால், சரிதான். தாவா சொத்தை என் கணவரின் தகப்பனார் சுப்பிரமணிய ரெட்டியார் என்பவர் 13.11.1995 அன்று கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால், சரிதான்.

2. என் கணவரின் தகப்பனார் சுப்பிரமணிய ரெட்டியார் கடந்த 23.08.2016 அன்று தாவா சொத்தை பொறுத்து ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்தார் என்றால், சரிதான், அந்த ஆவணத்தில் தாவா சொத்தையும், வேறு ஒரு சொத்தையும் சேர்த்து எழுதி வைத்துள்ளார்.

3. எனக்கும், வாதிக்கும் எப்போது திருமணமானது என்றால், 2009–ம் ஆண்டு

ஆனது. எங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால், ஒரு மகன், ஒரு மகள் ஆவார்கள். எனகும், என் கணவருக்கும் அவ்வப்போது கருத்துவேறுபாடு ஏற்பட்டு வந்தது என்றால், சரிதான், 2017–ம் ஆண்டிலிருந்து தான் அதுபோல் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. அதன்பின்னிட்டு எப்போதிலிருந்து நான் என் கணவரை விட்டு தனியாக வாழ்ந்து வருகிறேன் என்றால், 2017–ம் ஆண்டிலிருந்து ஒரே வீட்டில் தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம்.

4. தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்ற வகையில், தாவா சொத்தை எனது கணவர் ராஜேந்திரன் என்பவருக்கு துணிக்கடை நடத்துவதற்கு வாடகைக்கு விட்டிருந்தார் என்றால், என் கணவர் வாடகைக்கு விடவில்லை, என் மாமனார் தான் வாடகைக்கு விட்டார். அதுபோல் என் மாமனார், ராஜேந்திரனுக்கு தாவா சொத்தை எப்போது வாடடைக்கு விட்டார் என்றால், 2014–ம் ஆண்டு வாடகைக்கு விட்டார். எனது மாமனார் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், இல்லை, 31.12.2017 அன்று காலமாகிவிட்டார். நான் சொல்வது பொய் என்றும், என் கணவர் தான் ராஜேந்திரனுக்கு 31.07.2017 தேதியிட்ட பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தம் மூலம் வாடகைக்கு விட்டார் என்றால், சரியல்ல.

5. 20.02.2020 அன்று என் கணவருக்கு ரூ.5,00,000/–ம் பணம் தேவைப்பட்ட காரணத்தால் 1–ம் பிரதிவாதியிடமிருந்து கடனாக வாங்கிய விவரம் தெரியுமா என்றால், தெரியாது. அதே தினம் 1–ம் பிரதிவாதி மற்றும் அவரது இரண்டு மகன்கள், மற்றும் வாதி ஆகியோர் ஒரு பதிவு செய்யப்படாத ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொண்டு, அதன்பேரில் 1–ம் பிரதிவாதியிடமிருந்து பெற்ற பணத்தை வாதி திருப்பிக் கொடுத்துவிட்டால், 1–ம் பிரதிவாதி பெயருக்கு வாதி எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தை ரத்து செய்துக் கொடுத்துவிட வேண்டும் என எழுதிக் கொள்ளப்பட்டுள்ளது என்றால், அதுபோல் ஆவணம் எதையும் எழுதப்படவில்லை.

6. மேற்படி சம்மதப் பத்திரம் எழுதிய சமயத்தில் நான் உடன் இல்லாததால் அதுபற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல, 1–ம்

பிரதிவாதியிடம் நான் விசாரித்த போது அதுபோன்ற ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என என்னிடம் சொன்னார். 1–ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தில் உள்ள கையெழுத்தும், அதே தேதியிட்ட சம்மதப் பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் 1–ம் பிரதிவாதியின் கையெழுத்து தான் என்றால், சரியல்ல.

7. 1–ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த சம்மதப் பத்திரத்திற்கு முரணாக தாவா சொத்தை பொறுத்து அவர் பெயரில் வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றம் செய்துக் கொண்டார் என்றால், சரியல்ல. 1–ம் பிரதிவாதி பெயரில் வாதி தாவா சொத்தை பொறுத்து கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்திருந்தாலும் தாவா சொத்தில் வாடகைதாராக உள்ள ராஜேந்திரனிடமிருந்து வாதி தான் இன்றுவரை வாடகை பெற்று வருகிறார் என்றால், சரியல்ல.

8. நான் 1–ம் பிரதிவாதியின் உதவியுடன் தாவா சொத்தை அபகரிக்க வேண்டி என் பெயரில் தாவா சொத்தை பொறுத்து கிரையப் பத்திரத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால், சரியல்ல. நானும், 1–ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் வாடகைக்கு இருக்கும் ராஜேந்திரனை மிரட்டி தற்போது அவரிடமிருந்து வாடகை வாங்கி வருகிறோம் என்றால், சரியல்ல, சொத்தின் உரிமையாளர் என்ற வகையில் நான் தான் வாடகை வாங்கி வருகிறேன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 11.59 A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.04.17 16:44:09 +0530